## மின் சேமிப்பை ஊக்கப்படுத்த

# சிஎஃப்எல், எல்ஈடி பல்புகளை இலவசமாக வழங்க வேண்டும்

நாமக்கல், ஜூலை 15: மின் சேமிப்பை ஊக்குவிக்க நியாய விலைக் கடைகள் மூலம் சிஎஃப் எல், எல்ஈடி பல்புகளை இலவசமாக வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு மின்சார வாரியப் பொறியாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அந்தச் சங்கத்தின் 46-வது மாநில பொதுக் குழுக் கூட்டம் நாமக்கல்லில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சங்க மாநிலத் தலைவர் அந்தோணிபடோவராஜ் தலைமை வகித்தார். செயலர் அசோக்குமார் முன்னிலை வகித்தார்.

தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதி நிலை மற்றும் செயல் திறனை மேம்படுத்திடத் தனிக் கவனம் செலுத்தி வருவதற்காகவும், மின் உற்பத்தித் திறனை மேம்படுத்திட உடன்குடி அனல் மின் உற்பத்தித் திட்டத்தை தமிழக அரசே ஏற்று செயல்படுத்த ஆணை பிறப்பித்ததற்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், மின் சேமிப்பை ஊக்குவிக்க குண்டு பல்புகளுக்கு பதிலாக சிஎஃப்எல், எல்ஈடி விளக்குகளை பயன்படுத்திட முன்னோடியாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2 பல்புகளை நியாய விலைக கடைகள் மூலம் இலவசமாக வழங்கி மழைநீர் சேமிப்புத் திட்டம் போல் வெற்றிபெறச் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தவிர மின் சேமிப்பின் அவசியத்தை மாணவர்கள் அறிந்திட மின் சேமிப்பை கல்வித் திட்டத்தில் பாடமாக்கிடவும் வேண்டும்.

மரபு சாரா மின் உற்பத்தியை ஊக்குவிக்கவும், மின் தேவை பூர்த்தி செய்திடவும் தமிழகத்திலுள்ள அனைத்து பன்னடுக்கு மாளிகை, வணிகம், கல்வி நிறுவனக் கட்டடங்களிலும் சூரிய சக்தியை பயன்படுத்திடவும், சூரிய மின் உற்பத்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை செயல்படுத்திடவும் வேண்டும்.

மின்சார வாரிய மறு சீரமைப்பின் போது ஏற்படுத்த வேண்டிய முத்தரப்பு ஒப்பந்தத்தில் பணியாளர்களின் அச்சத்தை போக்கிட ஓய்வூதிய நிதியம் உருவாக்கி அரசு உத்தரவாதத்துடன்




கூட்டத்தில் பேசுகிறார் சங்க மாநிலத் தலைவர் அந்தோணிபடோவராஜ். உடன், செயலர் அசோக்குமார் மற்றும் நிர்வாகிகள்.

கூடிய முத்தரப்பு ஒப்பந்தமாக அமைத்திட வேண்டும்.

பட்டயப் பொறியாளர்கள் நலனுக்கு எதிராக பராபட்சமான முறையில் தொடர்ந்து செயலாற்றி வரும் தலைமைப் பொறியாளர், பணியமைப்பு பதவிகளுக்கு பதிலாக மனித வளத்தில் தேர்ச்சி பெற்றவரை நியமிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மின் பராமரிப்புக்கு மிக அத்தியாவசியமான துணை மின் நிலையங்களை இயக்கிடும் பதவிகளான தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்கள் அதிகளவில் காலியாக உள்ளன.

இதனால், மின் வாரிய பணிகள் பெருமளவில் பாதிக்கப்படுவதைத் தடுக்க காலியாக உள்ள அனைத்து தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களையும் நேரடி நியமனம் மூலம் நிரப்ப வேண்டும்.

15 ஆண்டுகளுக்கும் மேலாக பதவி உயர்வின்றி ஒரே நிலையில் பணியாற்றி வரும் இளநிலைப் பொறியாளர், முதல் நிலைப் பொறியாளர்கள் உதவிப் பொறியாளர்களுக்கு ஏற்கெனவே வழங்கியபோல உதவி செயற்பொறியாளர், சார்பு பதவிகளை தாமதமின்றி வழங்க வேண்டும்.

மின் அளவி சோதனை மேற்கொண்டு வாரிய வருவாயை பெருக்கிடும் வகையில் மின் அளவி சோதனைக் கூடங்களை மின் திட்டங்கள் தோறும் மீண்டும் இயக்கிடவும் வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மின் கட்டண உயர்வால் ரூ.8,000 கோடி வருவாய்

மின் கட்டண உயர்வால் தமிழக மின் வாரியத்துக்கு ரூ.8,000 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் புதிய மின் திட்டங்களை செயல்படுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றார் தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க மாநிலத் தலைவர் அந்தோணிபடோவராஜ்.

இதுகுறித்து, அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியது:

மின் திருட்டை தடுக்க ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரிகள் தலைமையில் சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் அந்தக் குழு ஒரே ஒரு நிறுவனத்திடம் இருந்து ரூ. ஒரு கோடி நஷ்டஈடு வசூலித்துள்ளது. இந்த நடவடிக்கைகள் தொடரும்பட்சத்தில் மின் திருட்டுகள் முழுமையாக தடுக்கப்படும்.

மின் வாரியத்தில் வழங்கப்படும் மின் அளவிகளுக்கு தமிழகம் முழுவதும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதிகளவில் மின் அளவிகள் அனுப்ப ப்பட்டதால் ஏற்பட்டுள்ள இந்த தட்டுப்பாட்டை போக்க மின் வாரியம் அதிகப்படியான மின் அளவிகளை கொள்முதல் செய்து வருகிறது. அதுவரை அங்கீகரிக்கப்பட்ட 6 தனியார் நிறுவனங்களிடம் இருந்து மின் அளவிகளை நுகர்வோர்கள் வாங்கிக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார் அவர்.




நாமக்கல்லில் நடந்த தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 46ம் ஆண்டு மாநில பொதுக்குழு கூட்டத்தில், அதன் மாநிலத் தலைவர் அந்தோணி பதோவராஜ் பேசினார். அருகில் மாநில செயலாளர் அசோக்குமார், பொருளாளர் பத்ரிநாராயணன்.

1607ADV05

காலைக்கதிர் நாளிதழ் 16.7.2012

காலைக்கதிர் நாளிதழ் 16.7.2012

# மின் சேமிப்பு திட்டத்தை பாடமாக்க பொறியாளர் சங்கம் கோரிக்கை

**நாமக்கல்:** 'மின் சேமிப்பை ஊக்குவிக்கவும், அதன் அவசியத்தை வருங்கால சந்ததியினர் உணர்ந்து செயல்படுத்திட, மின் சேமிப்பை கல்வித்திட்டத்தில் பாடமாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' என, பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரிய **பொறியாளர்** சங்கத்தின், 46ம் **ஆண்டு மாநில** பொதுக்குழு கூட்டம், **நாமக்கல்லில்** நடந்தது. மாநிலத் **தலைவர்** அந்தோணி பதோவராஜ் தலைமை வகித்தார். கிளைச் செயலாளர் ஆனந்தபாபு வரவேற்றார். மாநிலச் செயலாளர் அசோக்குமார், பொருளாளர் **பத்ரிநாராயணன், மண்டலச் செயலாளர் மோகன் ஆகியோர் பேசினர்.**

**கூட்டத்தில், மின் சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில்,** குண்டு பல்புகளுக்கு பதிலாக, சி.எஃப்.எல்., எல்.இ.டி., பயன்படுத்திட முன்னோடியாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டு பல்புகளை தமிழக அரசே, ரேஷன் கடைகள் மூலம் இலவசமாக அளித்து, மழை நீர் சேகரிப்பு திட்டம் போல் வெற்றி பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மரபுசாரா மின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையிலும், மின் தேவையை ஈடுகட்டும் வகையிலும், அனைத்து மளிகை, வணிக வர்த்தக மற்றும், கல்வி நிறுவனங்களில் சூரிய சக்தியை பயன்படுத்திடவும், சூரிய மற்றும் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மின்வாரி மறுசீரமைப்பின் போது ஏற்படுத்த வேண்டிய முத்தரப்பு ஒப்பந்தத்தில் பணியாளர்களின் அச்சத்தை போக்கும் வகையில், ஓய்வூதிய நிதியம் உருவாக்கி அரசு உத்திரவாதத்துடன் கூடிய முத்தரப்பு ஒப்பந்தமாக அமைத்திட தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காலியாக உள்ள அனைத்து தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்களையும் நேரடி நியமனம் மூலம் நிரப்ப, தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மின் சேமிப்பை ஊக்குவிக்கவும், அதன் அவசியத்தை வருங்கால சந்ததியினர் உணர்ந்து செயல்படுத்திட மின் சேமிப்பை கல்வித்திட்டத்தில் பாடமாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மாநில, மாவட்ட, கிளை நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.




நாமக்கல்லில் நடைபெற்ற மின்வாரிய பொறியாளர்கள் சங்க மாநில பொதுக்குழு கூட்டத்தின் மாநில பொதுச்செயலாளர் அசோக்குமார் பேசினார். அருகில் தலைவர் அந்தோனி பதோவராஜ் மற்றும் நிர்வாகிகள்.

# அரசு மூலம் வீட்டுக்கு 2 சிஎப்எல் பல்ப் இலவசமாக வழங்க மின்வாரிய இன்ஜினியர்கள் சங்கம் கோரிக்கை

நாமக்கல், ஜூலை.16-

தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர்கள் சங்க 46ம் ஆண்டு மாநில பொதுக் குழுக் கூட்டம் நாமக்கல் கோஸ்டல் ஹோட்டலில் இரண்டு நாட்கள் நடந்தது. சங்கமாநிலமாநிலதலைவர் அந்தோனி பதோவராஜ் நிகழ்ச்சிக்கு தலைவ வகித்தார். பொருளாளர் பத்ரிநாராயணன், நாமக்கல் மண்டல செயலாளர் மோகன், கிளைசெயலாளர் ஆனந்த்பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில பொது செயலாளர் அசோக்குமார் தீர்மானங்களை விளக்கப் பேசினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதீர்மானங்கள் விபரம்; தமிழகத்தில் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கிவந்தமின்சாரவாரியத்தின்நிதிநிலையையும், செயல் திறனையும் உயர்த்தியும், தமிழ்நாடு மின் வாரியத்தின்மின் உற்பத்தி திறனை மேம்படுத்திட உடன்குடி அனல் மின் உற்பத்திதிட்டத்தைஅரசே ஏற்றுநடத்திடமுடிவெடுத்து மின்வாரியத்திற்குபுத்துயிர் ஊட்டிய தமிழக முதல்வருக்கு பாராட்டு தெரிவிப்பதுடன், அவரது முயற்சிக்கு துணை நிற்பது. 15 ஆண்டுகளுக்கு மேலாக பதவி உயர்வின்றிஒரேநிலையில் இருக்கும் இளநிலைப் பொறியாளர்கள், முதல் நிலைப்பொறியாளர்களுக்கு, உதவிப்பொறியாளர்களுக்கு ஏற்கனவேவழங்கியதுபோல் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வை வழங்க மின்வாரியத்திற்கு தமிழக முதல்வர் உத்தரவிட வேண்டும். மின்சேமிப்பின் அவசியத்தை பள்ளி பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும். மின்சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொருகுடும்பத்திற்கும் குண்டு பல்பிற்கு பதிலாக இரண்டுசிஎப்எல்/எல்இடி பல்பு களை ரேசன்கடை மூலம் வழங்க தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மரபுசாரா மின்சக்தியை ஊக்குவிக்கும் வகையில் பெரியஷாப்பிங்மால்கள், காம்ப்ளக்ஸ்கள் மற்றும் அடுக்குமாடிக்குடியிருப்புகளில்சூரியமின்சக்திமற்றும் காற்றாலை மின்சக்தி திட்டங்களை அமைத்திட வலியுறுத்த வேண்டும் என்பவை உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழகம் முழுவதும் இருந்துதிரளானமின்வாரிய இன்ஜினியர்கள்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

[illegible] நாளிதழ் 16-7-2012

# மின் சேமிப்பை கல்வி திட்ட பாடமாக்க வேண்டும்

## பொறியாளர் சங்கம் கோரிக்கை

**நாமக்கல், ஜூலை 16:** மின் சேமிப்பின் அவசியத்தை மாணவர்கள் அறிய மின் சேமிப்பு குறித்து கல்வி திட்டத்தில் பாடமாக்க வேண்டும் என்று பொறியாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நாமக்கல்லில் தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கத்தின் 46வது மாநில பொதுக்குழுக் கூட்டம் நடந்தது. சங்க மாநில தலைவர் அந்தோணி படோவராஜ் தலைமை வகித்தார். செயலாளர் அசோக்குமார் முன்னிலை வகித்தார்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விபரம்:

துணை மின் நிலையங்களில் காலியாக உள்ள தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப வேண்டும். இளநிலை பொறியாளர், முதல் நிலை பொறியாளர்களுக்கு பதவி உயர்வு முறையில் உதவி செயற்பொறியாளர், சார்பு பதவிகளை உடனே வழங்க வேண்டும். குண்டு பல்புகளுக்கு பதிலாக சிஎஃப்எல், எல்ஈடி விளக்குகளை ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2 பல்புகள் வீதம் ரேஷன் கடைகள் மூலம் இலவசமாக வழங்க வேண்டும்.

மின் சேமிப்பின் அவசியத்தை மாணவர்கள் அறிய மின் சேமிப்பை கல்வித்திட்டத்தில் பாடமாக்க வேண்டும். மரபு சாரா மின் உற்பத்தியை ஊக்குவிக்கவும், மின் தேவை பூர்த்தி செய்யவும் தமிழகத்தில் உள்ள அனைத்து பன்னடுக்கு மாளிகை, வணிகம், கல்வி நிறுவன கட்டடங்களிலும் சூரிய சக்தியை பயன்படுத்த வேண்டும். சூரிய மின் உற்பத்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு மின்வாரியத்தின் நிதிநிலை, செயல்திறனை மேம்படுத்த தனிக்கவனம் செலுத்தி வருவதற்காகவும், மின் உற்பத்தி திறனை மேம்படுத்த உடன்குடி அனல் மின் உற்பத்தி திட்டத்தை தமிழக அரசே ஏற்று செயல்படுத்த உத்தரவிட்ட தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தினத்தந்தி நாளிதழ் 16.7.2012

### மின்சேமிப்பை ஊக்குவிக்க

# கல்வி திட்டத்தில் பாடமாக்கிட வேண்டும்

## மின்சார வாரிய பொறியாளர் சங்கம் கோரிக்கை

நாமக்கல், ஜூலை.16–
மின் சேமிப்பின் அவசியத்தை வருங்கால சந்ததியினர் உணர்ந்து செயல்பட மின்சேமிப்பை கல்வி திட்டத்தில் பாடமாக்கிட வேண்டும் என தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் வலியுறுத்தி உள்ளது.



கூட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் அசோக்குமார் பேசியபோது எடுத்தபடம்.

### மாநில பொதுக்குழு கூட்டம்

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 46–ம் ஆண்டு மாநில பொதுக்குழு கூட்டம் நேற்று நாமக்கல் ஓட்டல் கோஸ்டல் ரெசிடன்சியில் நடந்தது. கூட்டத்துக்கு மாநில தலைவர் அந்தோனி படோவராஜ் தலைமை தாங்கினார். இதில் பொதுச் செயலாளர் அசோக்குமார், பொருளாளர் பத்ரிநாராயணன், மண்டல செயலாளர் மோகன், நாமக்கல் கிளை செயலாளர் ஆனந்தபாபு உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலைமையையும், செயல் திறனையும் மேம்படுத்திட தனிக்கவனம் செலுத்தி செயலாற்றி வரும் தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு பாராட்டு தெரிவிப்பது.

### பல்பு வினியோகம்

மின்சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில் குண்டு பல்புகளுக்கு பதிலாக சி.எப்.எல்., எல்.இ.டி. விளக்குகளை பயன்படுத்திட முன்னோடியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2 பல்புகளை தமிழக அரசே நியாயவிலை கடைகள் மூலம் விலையில்லா விளக்குகளாக வழங்கி, மழைநீர் சேகரிப்பு திட்டம் போல, வெற்றிபெற செய்ய முதல்–அமைச்சரை கேட்டுக்கொள்வது.

மரபுசாரா மின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையிலும், மின்தேவையை ஈடுகட்டும் வகையிலும் தமிழகத்தில் உள்ள அனைத்து வணிக, வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் சூரிய சக்தியை பயன்படுத்திடவும், சூரிய மின் உற்பத்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை வலியுறுத்திடவும் கேட்டுக்கொள்வது. தமிழ்நாடு மின்சார வாரிய மறுசீரமைப்பின்போது ஏற்படுத்த வேண்டிய முத்தரப்பு ஒப்பந்தத்தில் பணியாளர்களின் அச்சத்தை போக்கும் வகையில், ஓய்வூதிய நிதியம் உருவாக்கி, அரசு உத்தரவாதத்துடன் கூடிய முத்தரப்பு ஒப்பந்தமாக அமைத்திட வேண்டும்.

### பாட திட்டம்

மின் பராமரிப்புக்கு மிக அத்தியாவசியமான துணை மின்நிலையங்களை இயக்கிடும் பதவியான தொழில்நுட்ப உதவியாளர்கள் பதவிகள் காலியாக உள்ளதால், நேரடி நியமனம் மூலம் நிரப்பவேண்டும். மின்சேமிப்பை ஊக்குவித்திடவும், மின் சேமிப்பின் அவசியத்தை வருங்கால சந்ததியினர் உணர்ந்து செயல்பட மின்சேமிப்பை கல்வி திட்டத்தில் பாடமாக்கிட முதல்–அமைச்சரையும், மின்சார துறை அமைச்சரையும் கேட்டுக்கொள்வது. என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### கொல்லிமலையில்

## தனியார் விடுதியில் தங்கியிருந்தவர்களிடம்